நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை.**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருமங்கலம்.

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 08ம் நாள் புதன்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.26/2025

**CNR No.TNMD14 - 000062 - 2025**

*****

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,

திருமங்கலம் தாலுகா காவல் நிலையம்,

குற்ற எண்.212/2024 ... குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

1. கணேசன் (வயது 48/2024),

த/பெ.அழகர் தேவர்,

2. பிரீத்குமார் (வயது 25/2024),

த/பெ.கணேசன்,

3. பிரனேஷ்குமார் (வயது 23/2024),

த/பெ.கணேசன்,

4. கீதா (வயது 42/2024),

க/பெ.கணேசன்,

1 முதல் 4 வரையுள்ள எதிரிகளின் முகவரி:–

சாத்தங்குடி, திருமங்கலம் தாலுகா,

மதுரை மாவட்டம். ... குற்றம் சாட்டப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | **ஆண்டு பட்டிகை வழக்கு எண்.26/2025** | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | திருமங்கலம் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.212/2024 |
| **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | |

| | | | |
|---|---|---|---|
| 3. | எதிரிகளின் பெயர் | : | 1. கணேசன்<br>2. பிரீத்குமார்<br>3. பிரனேஷ்குமார்<br>4. கீதா |
| 4. | எதிரிகளின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | 1. த/பெ.அழகர் தேவர்<br>2. த/பெ.கணேசன்<br>3. த/பெ.கணேசன்<br>4. க/பெ.கணேசன் |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | எதிரிகளின் முகவரி | : | 1 முதல் 4 வரையுள்ள எதிரிகளின் முகவரி:– சாத்தங்குடி, திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம். |
| 7. | எதிரிகளின் வயது | : | 1. 48/2024<br>2. 25/2024<br>3. 23/2024<br>4. 42/2024 |
| **தேதி விபரங்கள்** | | | |
| 8. | சம்பவம் | : | 31.10.2024 |
| 9. | புகார் | : | 01.11.2024 |
| 10. | கைது தேதி | : | A1–01.11.2024 |
| 11. | பிணை விடுப்பு | : | A1 – Bailed by this court, A2 to A4 – Anticipatory bail |
| 12. | Committal | : | -- |
| 13. | விசாரணை துவக்கம் | : | 02.07.2026 |
| 14. | விசாரணை முடிவு | : | 06.07.2026 |
| 15. | தண்டணை (அ) ஆணை | : | குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | : | -- |

| | | | |
|---|---|---|---|
| 17. | Period of Remand of the accused | : | - |
| 18. | Date of filing of the final report | : | 08.01.2025 |
| 19. | Date of questioning U/s.240, 246 & 251 of Cr.pc | : | 16.02.2026 |
| 20. | Miscellaneous petition and their results | : | U/s.311 Cr.P.C. – Allowed<br>U/s.359 BNSS. - Dismissed |
| 21. | Date of examination in chief and cross | : | <table><tr><th>PW's</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>1.</td><td>02.07.2026</td><td>--</td></tr><tr><td>2.</td><td>02.07.2026</td><td>--</td></tr><tr><td>3.</td><td>02.07.2026</td><td>--</td></tr><tr><td>4.</td><td>02.07.2026</td><td>02.07.2026</td></tr></table> |
| 22. | Date of examination accused U/s.313 Crpc | : | 06.07.2026 |
| 23. | Details of abscondence of accused and his appearance/production | : | Nil |
| 24. | Grant of stay by Superior court and the results thereof | : | Nil |
| 25. | காலதாமதத்திற்கான காரணம்: இல்லை | | |

இவ்வழக்கானது கடந்த 09.01.2025ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையின் போது, அரசின் சார்பாக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முருகன் அவர்கள் ஆஜராகியும், இது நாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு 06.07.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்.

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கின் வாதி வீட்டிற்கும் அவரது வீட்டிற்கு எதிர் வீட்டில் குடியிருக்கும் 1வது எதிரி குடும்பத்திற்கும் இடையே தெருபாதையை

பயன்படுத்துவதில் பிரச்சனை இருந்து வந்த நிலையில், 1 முதல் 3 வரையுள்ள எதிரிகள் அவர்களது வீட்டு வாசலில் 31.10.2024ம் தேதி இரவு 7.00 மணி முதல் இரவு 8.40 மணி வரை தொடர்ந்து பலத்த சத்தங்களை கொண்ட பட்டாசுகளை வெடித்து கொண்டிருந்ததாகவும், அப்போது வாதியின் வீட்டிற்கு வந்த சாட்சி ராஜலட்சுமியின் மீது 3வது எதிரி போட்ட பட்டாசு விழுந்து, சாட்சி ராஜலட்சுமியின் இடது கை, இடுப்பு ஆகிய இடங்களில் லேசான காயம் ஏற்பட்டதாகவும், இந்த சம்பவத்தை பற்றி 3வது எதிரியிடம் நியாயம் கேட்க சென்ற சாட்சி கணேசனை தாக்கியதாகவும், பின்பு 1வது எதிரி உருட்டு கட்டையையும், 2வது எதிரி இரும்பு பைப்பையும், 3வது எதிரி மரக்கை பிடி கொண்ட மண்வெட்டியையும், 4வது எதிரி கற்களையும் எடுத்துகொண்டு வாதி, சாட்சி கணேசன் மற்றும் சாட்சி ராஜலட்சுமி மூன்று பேரையும் முன் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு தேவிடியா மகளே, தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி தாக்கியதாகவும், 3வது எதிரி மண்வெட்டியாலும், 2வது எதிரி இரும்பு பைப்பாலும் அடித்து வாதியின் இடதுபக்க இடுப்பில் வீக்க காயம் ஏற்படுத்தியும், சாட்சி கணேசனை 2வது எதிரி இரும்பு பைப்பால் நடு மண்டையில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNSன் படி குற்றம் புரிந்துள்ளதாக திருமங்கலம் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

02. இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான போது எதிரிகளுக்கு வழக்கு நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSSன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

03. இவ்வழக்கில் எதிரிகளுக்கு நகல்கள் வழங்கப்பட்ட பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பிறகு குற்றம் பற்றி வினவிய போது எதிரிகள் பொய் வழக்கு என்று மறுத்து கூறினார்கள். இரு தரப்பும் கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால் எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSன் கீழ் குற்றசாட்டுகள் வனைந்து படித்துக்காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்ட போது எதிரிகள் மீண்டும் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை என்றார்கள்.

04. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>

05. இவ்வழக்கின் வாதி வீட்டிற்கும் அவரது வீட்டிற்கு எதிர் வீட்டில் குடியிருக்கும் 1வது எதிரி குடும்பத்திற்கும் இடையே தெருபாதையை பயன்படுத்துவதில் பிரச்சனை இருந்து வந்த நிலையில், 1 முதல் 3 வரையுள்ள எதிரிகள் அவர்களது வீட்டு வாசலில் 31.10.2024ம் தேதி இரவு 7.00 மணி முதல் இரவு 8.40 மணி வரை தொடர்ந்து பலத்த சத்தங்களை கொண்ட பட்டாசுகளை வெடித்து கொண்டிருந்ததாகவும், அப்போது வாதியின் வீட்டிற்கு வந்த சாட்சி ராஜலட்சுமியின் மீது 3வது எதிரி போட்ட பட்டாசு விழுந்து, சாட்சி ராஜலட்சுமியின் இடது கை, இடுப்பு ஆகிய இடங்களில் லேசான காயம் ஏற்பட்டதாகவும், இந்த சம்பவத்தை பற்றி 3வது எதிரியிடம் நியாயம் கேட்க சென்ற சாட்சி கணேசனை தாக்கியதாகவும்,

பின்பு 1வது எதிரி உருட்டு கட்டையையும், 2வது எதிரி இரும்பு பைப்பையும், 3வது எதிரி மரக்கை பிடி கொண்ட மண்வெட்டியையும், 4வது எதிரி கற்களையும் எடுத்துகொண்டு வாதி, சாட்சி கணேசன் மற்றும் சாட்சி ராஜலட்சுமி மூன்று பேரையும் முன் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு தேவிடியா மகளே, தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி தாக்கியதாகவும், 3வது எதிரி மண்வெட்டியாலும், 2வது எதிரி இரும்பு பைப்பாலும் அடித்து வாதியின் இடதுபக்க இடுப்பில் வீக்க காயம் ஏற்படுத்தியும், சாட்சி கணேசனை 2வது எதிரி இரும்பு பைப்பால் நடு மண்டையில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக உள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>

06. இவ்வழக்கின் வாதி சம்பவம் பற்றியும் மற்றும் புகார் கொடுத்த விபரம் பற்றியும் நல்லகுரும்பன் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும் மற்றும் சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்த விபரம் பற்றி கணேசன் மற்றும் ராஜலட்சுமி ஆகியோர்கள் முறையே அ.சா.2 மற்றும் 3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கினை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட திருமங்கலம் தாலுகா சார்பு ஆய்வாளர் திரு.மாயன் என்பவரை தனக்கு நன்கு தெரியும் என்றும் அவரது கையெழுத்து நன்கு தெரியும் என்றும் கூறி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக திருமங்கலம் தாலுகா காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.சுவிதா என்பவர்

அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் மற்றும் அ.சா.2ன் காயச்சான்று (நகல்) அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>எதிரிகளை சட்டப்பிரிவு 351(1)(ஆ) BNSSன் கீழ் வினவுதல்:–</u>**

07. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு எதிராக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் சட்டப்பிரிவு 351(1)(ஆ) BNSSன் கீழ் வினவியபோது அவற்றை எதிரிகள் பொய் சாட்சியம் என்று கூறியதோடு தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்கள். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**<u>வாதுரைகள்:–</u>**

08. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பில் எதிரிகள் மீதான வழக்கை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

09. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முருகன் அவர்கள் வாதிடும் போது அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும் வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட வழக்கு என்றும் எதிரிகளும் அ.சா.1 முதல் 3 வரையுள்ளவர்களும் தற்பொழுது சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்து உள்ளதாகவும், இந்த வழக்கின் சம்பவ சாட்சிகள் அனைவரும் தங்களது சாட்சியத்தின் போது அரசு தரப்பிற்கு எதிராக

சாட்சியம் அளித்துள்ளதாகவும் எனவே அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை எந்தவித சந்தேகங்களுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

<u>ஆய்வுக்குரிய பிரச்சனை:–</u>

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகளின் மீதான சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>சாட்சிகளின் மதிப்பீட்டல்:–</u>

11. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 இந்நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தின் பொழுது தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், புகாரில் உள்ள கையெழுத்தும் தன்னுடையது தான் என்றும், தன்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதை தான் எதிரிகளுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன் என்றும், சாட்சியம் அளித்து, அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

12. இவ்வழக்கின் சம்பவ சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் இந்நீதிமன்றத்தில் தங்களது சாட்சியத்தின் பொழுது தாங்களும் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றும், தங்களிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள கையொப்பம் தங்களுடையது தான் என்றும், அதை தாங்கள் எதிரிகளுடன் சமாதானமாக

செல்வதற்காக செய்து கொடுத்தேன் என்றும் சாட்சியம் அளித்து, அவர்களை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அவர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

13. இவ்வழக்கில் எதிரிகளும் அ.சா.1 முதல் 3 வரையுள்ளவர்களும் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி சமாதானமனு தாக்கல் செய்துள்ளார்கள்.

14. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 மற்றும் சம்பவ சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளை சாட்சியாக விசாரித்தாலும் வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக திருமங்கலம் தாலுகா காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.சுவிதா என்பவரை அ.சா.4 ஆக விசாரித்து, அவர் மூலமாக வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து அரசு தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசு தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

15. மேற்கண்டவாறு அரசு தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் 3 வரையுள்ள சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் அவர்கள் எந்த இடத்திலும் எதிரிகள் அ.சா.1 முதல் 3 வரையுள்ளவர்களை பொது இடத்தில் பொது மக்களுக்கு மத்தியில் வைத்து திட்டியதாகவோ, அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டது பற்றி அ.சா.4

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரிகளை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்ககூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் இல்லாததால் எதிரிகள் மீதான குற்றச்செயல்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிகளுக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

16. முடிவாக, அரசு தரப்பு வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை சட்டப்பிரிவு 271(1) BNSSன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கில் சொத்துக்கள் இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 08ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**<u>பின்னிணைப்பு:–</u>**

**<u>1. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் மாதிரி அட்டவணை:–</u>**

| அரசு தரப்பு சாட்சி எண். | அரசு தரப்பு சாட்சியின் பெயர். | அரசு தரப்பு சாட்சியின் பங்கு |
|---|---|---|
| 1. | திரு.நல்லகுரும்பன் | புகார்தாரர் |
| 2. | திரு.கணேசன் | பாதிக்கப்பட்ட சாட்சி |
| 3. | திருமதி.ராஜலட்சுமி | பாதிக்கப்பட்ட சாட்சி |
| 4. | திருமதி.சுவிதா | விசாரணை அதிகாரி |

**<u>2. அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் மாதிரி அட்டவணை:–</u>**

| ஆவண எண். | ஆவணத்தின் பெயர். | ஆவணத்தை நிரூபித்த/ சான்றளித்த சாட்சி |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2. | சமாதான மனு | அ.சா.1 |
| 3. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| 4. | பார்வை மகசர் | அ.சா.4 |
| 5. | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| 6. | அ.சா.2ன் காயச்சான்று | அ.சா.4 |

**<u>3. சான்று பொருள்:–</u>** இல்லை

**<u>4. எதிரிகள் தரப்பு சாட்சிகள்:–</u>** இல்லை

**<u>5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>** இல்லை

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**குறிப்பு:–** 1) விசாரணையின் போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:–** மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR Date: 2026.07.08 15:58:41 +0530

நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.